## 29.24 மக்கள் நலப்பணியாளர்கள் பணியிடங்கள் – 15.9.2000 முதல் ஓராண்டு காலத்திற்கு நீட்டித்தல்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.253 நாள் : 18.09.2000

படிக்க :

(1). அரசாணை (நிலை) எண்.50, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 24.02.1997
(2). அரசாணை (1டி) எண்.403, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 15.09.1998
(3). அரசாணை (நிலை) எண்.79, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 26.04.1999
(4). அரசாணை (நிலை) எண்.194, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 20.09.1999
(5). ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண்.ந.க.60269/2000/எச்.2, நாள் 04.08.2000.

**ஆணை**

பார்வை ஒன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணையின் தொடர் நடடிவக்கையாக 15.09.1997 முதல் 13,491 மக்கள் நலப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்த பணியிடங்கள் பார்வை 4–ல் உள்ள அரசாணையில் 14.09.2000 வரை நீட்டித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மக்கள் நலப்பணியாளர்களின் பணியிடங்கள் தேவைக்குறித்து அரசு கவனமாக ஆராய்ந்தது. மக்கள் நலப்பணியாளர்கள் அவசியம் ஆதலால் இவர்களது பணியிடங்களை 15.09.2000 லிருந்து 14.09.2001 வரை மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு நீட்டித்து அரசு ஆணையிடுகிறது. இந்த பணியிடங்களில் பணிபுரிபவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பகுதிநேரப்பணியாளர்கள் ஆவார்கள். இவர்கள் செய்யும் சேவைக்காக பார்வை3–ல் குறிப்பிட்டிருக்கும் அரசாணையின்படி இவர்களுக்கு மதிப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.750/– (ரூபாய் எழுநூற்று ஐம்பது மட்டும்) மற்றும் பயணப்படியாக மாதம் ரூ.50/– (ரூபாய் ஐம்பது மட்டும்) வழங்கப்படும்.

3. மக்கள் நலப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் பயணப்படி செலவினம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2515–00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 800– ஏனைய செலவு ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் II மாநில திட்டம் JQ – படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்களில் மக்கள் நலப்பணியாளர்கள் வேலை வாய்ப்புத் திட்டம் 09, உதவி மானியங்கள் – 01 நடப்பு செலவுக்கான மானியங்கள் (த.தொ.கு.2515–00, 800–ஜே.க்யூ.0918)"

4. இந்த ஆணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.363/ADS (US)/2000, நாள் 15.09.2000.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரேமஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்